[2013 ஏப்ரல் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலிருந்து செயல்படும் மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையம், தென் மாநிலங்களுக்காக ஒட்டுமொத்த தொழில்நுட்பங்களுக்கான ஆராய்ச்சிகளையும் பருத்தி பயிர் தொடர்பான பல்வேறு ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. இது தவிர, கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திலே கோவை மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களுக்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, கோவை மண்டலத்துக்குள் வரும் சேலம் மாவட்டத்தில் பயிரிடும் பருத்திப் பயிருக்கான தொழில்நுட்ப விவரங்களையும் பல்வேறு ஆராய்ச்சிக்கான விவரங்களையும் இந்த ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் பெற முடியும். எனவே, சேலம் மாவட்டம், கொளத்தூரில் தனியாக ஒரு பருத்தி ஆராய்ச்சி நிலையம் தொடங்கவேண்டிய அவசியம் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து இதை வலியுறுத்தியதன் அடிப்படையிலே, அப்படி தேவையா என்பதைப் பற்றிய ஓர் ஆராய்ச்சி செய்து, அப்படி தேவையிருப்பின் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு அவரது கோரிக்கை எடுத்துச் செல்லப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 310, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

310—

கூட்டுறவு மேலாண்மை நிலையம்

***17287—திரு. ஆர்.பி. உதயகுமார்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தூரிலுள்ள தியாகி சங்கரலிங்கனார் கூட்டுறவு மேலாண்மை நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் விருதுநகர் மாவட்டம், சாத்தூரில் இயங்கிவரும் தியாகி சங்கரலிங்கனார் கூட்டுறவு மேலாண்மை நிலையம் தற்போது எஸ்.ஆர். நாயுடு நகரிலுள்ள தனியார் கட்டடத்தில் மாதம் ரூ.6,000/– வாடகையில் செயல்பட்டு வருகிறது. இம்மேலாண்மை நிலையத்தால் நடத்தப்பட்டுவரும் கூட்டுறவு மேலாண்மைப் பட்டயப் பயிற்சி, நகை மதிப்பீட்டாளர் பயிற்சி, இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப் படிப்புகள் ஆகியவற்றில் சேர இம்மாவட்டத்திலுள்ள மாணவர்களிடையே போதிய அளவு ஆதரவு இல்லாத காரணத்தால், இப்பயிற்சி நிலையம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருகிறது. இந்நிலையில் இம்மேலாண்மை நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் வீர வரலாறு படைத்து வருகின்ற காவல் துறைக்கு மேலும் புத்துணர்ச்சி ஏற்படுத்துகின்ற வகையிலே முத்து, முத்தான 67 வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்புகளை வாரி வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பொதுமக்களின் காவலனாக விளங்குகின்ற காவல் துறையின் நலன் காக்கும் ஒரே பாதுகாவலராக, புரட்சி வரலாறு படைத்துவருகின்ற வாழும் மனித தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்கள் நாளைய பாரத தேசத்தின் ஒரே பாதுகாவலராக வெற்றி வரலாறு படைத்திட, அந்தப் பொன்னான நன்னாளை மிக விரைவிலே இந்தியத் திருநாடு கண்டிட, இந்த சித்ரா பௌர்ணமி நன்னாளில் வணங்கி, வேண்டுகிறேன்.*

[2013 ஏப்ரல் 25

தாய் நாட்டிற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டிட, தன்னுயிரை தியாகம் செய்திட்ட தியாகி சங்கரலிங்கனாரின் திருப்பெயரில் விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தொகுதியில் செயல்பட்டு வருகின்ற கூட்டுறவு மேலாண்மை நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அன்போடு வேண்டுகின்றேன். மேலும், இந்தக் கூட்டுறவு மேலாண்மை நிலையம் 1986 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தற்போது இந்தக் கட்டடம் நகரத்திலிருந்து ஓர் ஒதுக்குப்புறத்தில் இருக்கிற சிவசக்தி கல்யாண மண்டபத்திலே மாத வாடகை ரூ.6,000/–ல் இயங்கி வருகின்ற காரணத்தினாலே அங்கே மாணவர்கள் அதிகமாக சேராத ஒரு நிலை நிலவி வருகிறது. தற்பொழுது இடம் தேர்வு செய்யப்பட்டுவிட்டதாக நான் அறிகின்றேன். ஆகவே, அங்கே பயிற்றுவிக்கப்படுகிற Diploma in Co-operative Management, Jewel Appraiser *கல்வி, முதுகலை மற்றும் இளங்கலை கல்வி போன்றவற்றுக்கு எல்லாம் அந்தப் பகுதியிலே இருக்கிற கிராமப்புற மாணவர்கள் அதிகமாக சேர்வதற்கு ஆர்வம் கொண்டிருந்தாலும், அந்தக் கூட்டுறவு மேலாண்மை நிலையம் வாடகைக் கட்டடத்திலே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயகுமார், கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *ஒதுக்குப்புறத்திலே நடைபெறுகிற காரணத்தால், நகரத்தின் மையப் பகுதியிலே தேர்வு செய்யப்பட்டிருக்கின்ற இடத்திலே அதற்கு சொந்தக் கட்டடம் அமைத்தால் மாணவர்கள் அதிக அளவிலே அங்கே பயிலக்கூடிய வாய்ப்பு உருவாகும். ஆகவே, மாணவ சமுதாயத்தின் காவல் அரணாக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனித அரசு சொந்தக் கட்டடம் கட்டித் தர ஆவன செய்யயுமா? என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகி சங்கரலிங்கனார் கூட்டுறவு மேலாண்மை நிலையம் 14–11–1986 இல் சாத்தூரில் ஆரம்பிக்கப்பட்டு 26 ஆண்டு காலமாக வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. தற்பொழுது எஸ்.ஆர். நாயுடு நகரில், 1,200 சதுர அடி பரப்பளவில் உள்ள கட்டடத்தில் 13 ஆண்டு காலமாக வாடகைக்*

2013 ஏப்ரல் 25]

கட்டடத்திலே இயங்கி வருகிறது. நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில்தான் இந்தப் பாடத் திட்டங்கள் எல்லாம் முறைப்படுத்தப்பட்டன. 2001 வரை கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்களில் பயிற்றுவிக்கப்பட்டவை—கூட்டுறவுக் கொள்கை மற்றும் வரலாறு, கூட்டுறவுக் கடன், கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு சார்பற்ற கூட்டுறவுகள், கூட்டுறவுச் சட்டம், கூட்டுறவுக் கணக்கியல், கூட்டுறவுத் தணிக்கை, கூட்டுறவு மேலாண்மை இப்படி 8 வகுப்புகள் மட்டுமே நடத்தப்பட்டு வந்தன.

இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு இந்தப் பாடத் திட்டங்களில் சில மாற்றங்களைக் கொண்டுவந்து, முதன்முதலாக கூட்டுறவுக் கொள்கை, கடன், சங்கம் மற்றும் சங்கம் சார்பற்ற சங்கங்கள் இதிலே நிதி, கணக்கியல், விரைவான வளர்ச்சித் திட்டங்கள் போன்ற புதிய பாடத் திட்டங்களை சேர்த்தார்கள். அங்கே மாணவர்கள் மிகவும் குறைவாக படிக்கிறார்கள். சென்ற மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே 2009–2010 இல் கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் பாடத் திட்டங்கள் நடத்தவே இல்லை. 2011–2012 இல் மீண்டும் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு இந்தப் பயிற்சித் திட்டங்களைத் தொடங்க வேண்டுமென்று சொன்னதன் அடிப்படையில், விருதுநகரில் உள்ள தியாகி சங்கரலிங்கனார் கூட்டுறவு மேலாண்மைப் நிலையத்தில் கடந்த 2011–2012 இல் முழுநேர கூட்டுறவு மேலாண்மைப் பட்டயப் பயிற்சியில் 30 பேர்; அஞ்சல்வழி பயிற்சியில் 27 பேர்; இளங்கலை பட்டப் படிப்பில் 15 பேர்; இந்த ஆண்டு அதிலிருந்து மிகக் குறைவாக முழுநேர கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சியில் 13 பேர்தான் படிக்கிறார்கள். அது போக, இந்தப் பயிற்சியை அஞ்சல்வழியாக 42 பேர் படிக்கிறார்கள். இளங்கலையில் 17 பேர்தான் சேர்ந்திருக்கிறார்கள். இரண்டாவது, பெருத்த நஷ்டத்தில் வேறு இருக்கிறது. அதாவது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, கூட்டுறவுத் துறையை மேம்படுத்துகின்ற முறையிலே 1–7–2008 வரை இந்தக் கூட்டுறவுப் பயிற்சி நிலையமானது தனி இயக்கமாக இருந்தது. அந்தந்த மாவட்டங்களிலுள்ள J.R. கட்டுப்பாட்டில், அங்குள்ள அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் அது இருந்ததனாலே C.S.R., D.R. போன்றவர்கள் அங்கே சென்று வகுப்பு எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

[2013 ஏப்ரல் 25

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *நான் அங்குள்ள விவரங்களைச் சொல்ல வேண்டுமென்பதற்காக விரிவாகச் சொல்கிறேன். அதாவது, எதனால் அதை நடத்தமுடியாது என்பதற்காகச் சொல்கிறேன். இந்தமாதிரியான சூழ்நிலையில் 1–7–2008–லே கூட்டுறவு இணையதள சேர்க்கையைக் கொண்டு வந்ததனால், அதற்கென தனியாக பயிற்சியாளரை நியமிக்க வேண்டியிருந்தது. அந்தப் பயிற்சியாளருக்கு 40 ஆயிரம் ரூபாய் வரைக்கும் சம்பளம் கொடுக்க வேண்டியிருந்தது. அந்த வகையில் மூன்று பேருக்குச் சம்பளம் கொடுக்க வேண்டியிருந்தது. ஆக, இப்பொழுது அந்த மேலாண்மை நிலையம் பயிற்சியாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத சூழ்நிலையில், பெரிய நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, அது தொடர்ந்து இயங்க முடியாத ஒரு சூழ்நிலையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். 92012–2013 ஆம் நிதியாண்டில் மட்டும் அங்கு வந்த வருவாய் ரூ. 11,46,520/–; ஆன செலவு ரூ. 16,05,727/– ஆகும். எனவே, அங்கு சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்திலே முடக்கப்பட்ட இந்தக் கூட்டுறவு மேலாண்மை நிலையம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனித அரசு அமைந்ததற்குப் பின்னால்தான், இப்போது மீண்டும் புத்துயிர் பெற்றிருக்கிறது. ஆகவே, மாணவர்கள் தற்போது அதிலே ஆர்வமாகச் சேருவதற்கு விருப்பம் கொண்டிருக்கின்றார்கள். தற்போது இல்லையென்றாலும்கூட, எதிர்காலத்திலே மாணவச் சமுதாயத்தின் நலன் கருதி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனித அரசு இதைப் பரிசீலிக்க வேண்டுமாய் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அன்போடு வேண்டி அமர்கிறேன்.*

2013 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களின் சேர்க்கை அங்கு அதிகமாகும்போது, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, உறுதியாக அதற்கான பயிற்சி நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 311, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

311—

மேம்பாலம்

***24844—திரு. ஆர். ராமமூர்த்தி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரவாண்டி தொகுதி, காணை ஒன்றியம், மல்லிகைப்பட்டு கிராமத்தில் பம்பை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) விக்கிரவாண்டி தொகுதி, காணை ஒன்றியம், மல்லிகைப்பட்டு கிராமத்தில் பம்பை ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.